மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக் காட்டியதைப்போல, தச்சம்பட்டு சார்பதிவாளர் அலுவலகத்தைப் பொறுத்தவரையில்—திருவண்ணாமலை-1 சார்பதிவாளர் அலுவலகத்திற்குட்பட்ட 11 கிராமங்களையும், திருவண்ணாமலை-2 சார்பதிவாளர் அலுவலகத்தின் 12 கிராமங்களையும், வேட்டவலத்தின் 2 கிராமங்களையும், தண்டராம்பட்டிலிருக்கும் 3 கிராமங்களையும் இணைத்தால், மொத்த ஆவணங்கள் ஒரு ஆண்டில் பதிவு செய்யப்படுவது 800 தான். அரசினுடைய கொள்கை, குறைந்தபட்சம் 2000 ஆவணங்கள் பதிவு செய்யப்பட வேண்டும் என்பது. அதனால்தான் தற்சமயம் தச்சம்பட்டைப் பொறுத்த அளவில், சார்பதிவாளர் அலுவலகம் அமைக்கவேண்டுமானால் அங்கே ஆண்டுக்கு 2000 ஆவணங்கள் பதிவு செய்யப்பட வேண்டும். 2000 ஆவணங்களுக்கு மேல் பதிவாகின்ற, கோரிக்கை இருக்கிற ஊர்கள் நிறைய இருக்கின்றன தமிழகத்திலே. அவற்றை வரிசை வாரியாக எடுப்பதற்கு அரசு ஆய்வு செய்துகொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 597, திரு. ஆர்.ஆர். சேகரன், மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்.

597—

கால்நடை மருத்துவமனை

***25624**—திரு. ஆர்.ஆர். சேகரன்:**

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் ஒன்றியம், வெள்ளாளப்பட்டியில் கால்நடை மருத்துவமனை ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சேலம் மாவட்டம், ஓமலூர் ஒன்றியம், வெள்ளாளப்பட்டியில் கால்நடை மருத்துவமனை ஏற்படுத்த தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திரு. ஆர்.ஆர். சேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓமலூர் ஒன்றியம், வெள்ளாளப்பட்டி கிராமத்தைச் சுற்றி முப்பதுக்கும் மேற்பட்ட குக்கிராமங்கள் இருக்கின்றன. அங்கே ஏராளமான கால்நடைகள் இருக்கின்றன. அந்தக் கால்நடைகளின் நலனைக் கருத்தில் கொண்டு அந்தப் பகுதியிலே ஒரு கால்நடை மருத்துவமனை தொடங்க அரசு மறுபரிசீலனை செய்யுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், ஓமலூர் ஒன்றியம், வெள்ளாளப்பட்டி கிராமத்தில் தற்போது கால்நடைக் கிளை நிலையம் செயல்பட்டு, அதன் மூலம் கால்நடைகளுக்குச் சிகிச்சைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அக்கால்நடைக் கிளை நிலையத்திற்கு சேனக்கவுண்டன்புதூர் பார்வைக் கிளை நிலையமாகச் செயல்பட்டு வருகிறது. மேலும் ஓமலூர் ஒன்றியம், கருப்பூரிலே ஒரு கால்நடை மருந்தகமும், சிக்கம்பட்டி, காமலாபுரம், முத்தநாயக்கன்பட்டி ஆகிய மூன்று இடங்களில் கால்நடைக் கிளை நிலையங்களும், இவற்றிற்கு முறையே தண்டமங்கலம், சரக்கபுள்ளையூர், பி. நல்லகவுண்டனூர் ஆகிய 3 இடங்களில் பார்வைக் கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. எதிர்வரும் காலங்களில் வெள்ளாளப்பட்டி கிராமத்தில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டும், அரசின் நிதிநிலையைக் கருத்தில் கொண்டும் வெள்ளாளப்பட்டியில் கால்நடை மருந்தகம் தொடங்க பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 598, திரு. செங்கை சிவம், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

598—

நுழைவு வாயில்

***26444—திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—